# சென்னை ஹிந்தி எதிர்ப்புத் தலைமை நிலையம்.

—— :0: ——

## தியாகராயநகர்.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூன் 3

சென்னை தியாகராய நகரில் வெங்கடநாராயண ரோட்டில் அமைக்கப்பட்டிருக்கும் ஹிந்தி எதிர்ப்புத் தலைமை நிலையத்தில் கொடியேற்று விழா 1-6-38-ல் நடைபெற்ற செய்தி எல்லோரும் அறிந்ததே. தலைமை நிலையத்தில் இப்போது தோழர்கள் சுவாமி ஈழத்துச் சிவானந்தம் சண்முகானந்தம் அருணகிரிநாதர், அடிகள் இளங்கோவன் முதலியவர்கள் இருந்து வருகிறார்கள். தினந்தோறும் காலை வேலைகளில் நடைபெற்று வருகிற சென்னைக் கூட்டங்களுக்கு இவர்களும் தோழர் சி. டி. நாயகம் அவர்களும் உண்ணாவிரதம் இருந்து வரும் தோழர் கே. என். ஸ்டாலின் ஜெகதீசன் அவர்களும் தவறாமல் சென்று வருகிறார்கள். சென்னையில் கிளர்ச்சியும் ஊக்கமும் அதிகமாகக் காணப்படுகிறது. இனி ஒரே நாளில் பல இடங்களில் கூட்டம் கூடும்போல் தெரிகிறது. ஆனால் குறிப்பிட்ட சில பத்திரிகைகள் இக் கிளர்ச்சிகளைப் பற்றிக் கட்டுப்பாடாய் எழுதாமலே இருந்து வருகின்றன.